T

# அரையாண்டு பொதுத்தேர்வு - 2023

## பதினொன்றாம் வகுப்பு

Reg No

## பொதுத்தமிழ்

நேரம்: 3.00 மணி | மதிப்பெண்கள்: 90

### பகுதி - I

கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக. 14 x 1 = 14

1. ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் ______
   அ) நூல் ஆ) ஓலை இ) எழுத்தாணி ஈ) தாள்
2. திருக்குறளில் உள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை ______
   அ) 4 ஆ) 30 இ) 9 ஈ) 8
3. விரிகதிர் - இலக்கணக்குறிப்பு ______
   அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை இ) உவமைத்தொகை ஈ) தொழிற்பெயர்
4. 'காட்டின் மூலவர்' என்று அழைக்கப்படும் விலங்கு ______
   அ) சிங்கம் ஆ) புலி இ) கரடி ஈ) யானை
5. ஆனந்தரங்கருக்கு தொடர்பில்லாத குறிப்பு எது?
   அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிஸ்
   இ) தலைமை துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை
6. நிழல்போலத் தொடர்ந்தான் - இது எவ்வகை உவமை?
   அ) வினை ஆ) பயன் இ) வடிவம் ஈ) உரு
7. பிள்ளைக்கூடம் கவிதை இடம் பெற்ற நூல் ______
   அ) கொடி விளக்கு ஆ) நெருஞ்சி இ) கடுபூக்கள் ஈ) மறுபயணம்
8. தமிழரின் வாழ்வியல் கருவூலம் என்று அழைக்கப்படும் நூல் ______
   அ) அகநானூறு ஆ) நற்றிணை இ) புறநானூறு ஈ) பரிபாடல்
9. பஞ்சமுகி என்ற கர்நாடகச் செவ்வியல் இராகத்தை உருவாக்கியவர்
   அ) ஏ.ஆர்.ரகுமான் ஆ) இளையராஜா இ) ஹரிபிரசாத் ஈ) பாரதிராஜா
10. திரிகூட ராசப்பக் கவிராயரின் கவிதைக் கிரீடம் என்று போற்றப்படும் நூல் ______
    அ) திருச்சாழல் ஆ) பிள்ளைத்தமிழ்
    இ) குற்றாலக்குறவஞ்சி ஈ) திரௌபதி குறவஞ்சி
11. கூவும் குயிலும் கரையும் காகமும் தொடரில் இடம் பெற்ற மரபு ______
    அ) பெயர் மரபு ஆ) ஒலி மரபு இ) வினை மரபு ஈ) இவை மூன்றும்
12. கீதாஞ்சலி என்ற கவிதை நூலுக்கு நோபல் பரிசு பெற்றவர் ______
    அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) பிரபஞ்சன் ஈ) தாகூர்
13. பொருத்தி விடை தேர்க
    அ) விரியன் - 1. தண்டை
    ஆ) திருமுருகு - 2. காலாழி
    இ) நாங்கூழ்ப் புழு - 3. சிலம்பு
    ஈ) குண்டலப்பூச்சி - 4. பாடகம்
    அ) 3,4,2,1 ஆ) 3,1,4,2 இ) 4,3,2,1 ஈ) 4,1,3,2
14. மனோன்மணீயத்தில் உள்ள கிளைக்கதை ______
    அ) சிவகாமியின் சரிதம் ஆ) பாண்டியன் பரிசு
    இ) பார்த்திபன் கனவு ஈ) அலை ஓசை

www.Padasalai.Net

## பகுதி - II

### பிரிவு - 1

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. 3 x 2 = 6

15. தமிழர்கள் புகழையும், பழியையும் எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?
16. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.
17. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?
18. நன்னூல் பொதுப்பாயிரம் வாயிலாக நீவிர் அறியும் செய்திகள் யாவை?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி. 2 x 2 = 4

19. சங்க காலத்தில் தமிழ்மொழியின் நிலை குறித்து இராசமாணிக்கனாரின் கூற்று யாது?
20. தமிழ்நாட்டின் மாநில மரம் எது? ஏன்?
21. நாட்டுப்புறங்களிலும், பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?

### பிரிவு - 3

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. 7 x 2 = 14

22. *ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.*
    அ) மலிந்த ஆ) வைத்தார்
23. *ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.*
    அ) பெருங்காடு ஆ) கொழுஞ்சோறு
24. ஆசிரியப்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
25. *பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்துக.*
    விசா, கோரிக்கை
26. *மரபுப் பிழையை நீக்கி எழுதுக:*
    மாந்தோட்டத்தில் குயில் கத்தியது
27. என்னே! மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பக்கலை. (செய்தித் தொடராக்குக)
28. கலைச்சொல்லாக்கம் பொருள் தருக.
29. *மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக :*
    குரை, குறை
30. *தமிழ்க் கலைச்சொற்களை எழுதுக.*
    Value Education, Document

## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2 x 4 = 8

31. காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது?
32. வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன யாவை?
33. தமிழகப் பெண்கள் பாடிக்கொண்டே விளையாடும் போது வெளிப்படுத்தும் மேன்மையான கருத்துக்களாகத் திருச்சாழல் உணர்த்துவன யாவை?
34. விரும்பியதை அடைவது எப்படி? குறள்வழி விளக்குக.

### பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2 x 4 = 8

35. மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரி.
36. ஜீவாவின் பேச்சு நடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?
37. தாமஸிகம் என்றால் என்ன?
38. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.

www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பிரிவு - 3

3 x 4 = 12

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.

39. பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

*(அல்லது)*

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து - இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.

40. *இலக்கிய நயம் பாராட்டுக. மையக் கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக*

"தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க
கொண்டல்கள் முழவின் ஏங்க குவளைகண் விழித்து நோக்க
தென்திரை எழினி காட்ட தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம் வீற்றிருக்கும் மாதோ"

41. *பழமொழிகளை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.*

சிறுதுளி பெருவெள்ளம்

*(அல்லது)*

வாய்மையே வெல்லும்

42. *தமிழாக்கம் தருக :*

1. You must be the change, you wish to see in the world
2. Nobody can hurt me without my permission.
3. The week can never forgive. Forgiveness is the attribute of the strong.
4. Eagles don't catch flies.

43. மழை *(அல்லது)* இயற்கை என்ற தலைப்பில் கவிதை புனைக.

## பகுதி - IV

3 x 6 = 18

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

44. அடக்கமுடைமை குறித்து வள்ளுவரின் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

*(அல்லது)*

'பாரதிதாசன் ஒரு புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

45. 'கல்லும் கதை சொல்லும்' என்னும் தொடர் தஞ்சை பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

*(அல்லது)*

பௌத்தக் கல்வி, சமணக் கல்வி மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பலவேறு மாறுதல்களை விவரி.

46. யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

*(அல்லது)*

சிம்பொனித் தமிழரும், ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

## பகுதி - V

4 + 2 = 6

47. *அடிபிறழாமல் எழுதுக :*

அ) சிற்றூரும் .......... எனத் தொடங்கும் புரட்சிக்கவி பாடல்

ஆ) 'பொருட்டு' என முடியும் குறள்.

*****

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com